# வெளிவாரிப் பட்டங்கள் மற்றும் விரிவாக்கல் கற்கைகள் நிலையம் (CEDEC)

## கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

## கலைத்துறையில் டிப்ளோமா (SLQF L3)

கிழக்குப் பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டங்கள் மற்றும் விரிவாக்கல் கற்கைகள் நிலையமானது கலை கலாசார பீடத்துடன் இணைந்து ஒரு வருட காலம் கலைத்துறையில் டிப்ளோமா கற்கைநெறியை வழங்கவிருக்கின்றது.

**நுழைவுத் தகைமைகள்:**

1. க.பொ.த. உயர்தரத்தில் ஏதாவது ஒரு பிரிவில் சித்தி பெற்றிருந்து, பல்கலைக்கழக நுழைவுத் தகைமை பெற்றிருத்தல் அல்லது அதற்குச் சமமான தகைமை பெற்றிருத்தல்.

**அல்லது**

2. குறைந்தது 12 வருடகாலப் பாடசாலைக் கல்வியுடன், SLQF மட்டம் 2 இற்குச் சமமான அடிப்படைப் பாடநெறியைப் பூர்த்திசெய்திருப்பதுடன், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கையால் நடத்தப்படும் உளச்சார்புப் பரீட்சையில் (Aptitude test) சித்தியடைதல்.

**அல்லது**

3. NVQF மட்டம் 4 ஐ பூர்த்தி செய்திருத்தல் அல்லது உத்தரவாதமளிக்கப்பட்ட தொழில் அனுபவம் அல்லது உத்தரவாதமளிக்கப்பட்ட முன்கற்றலுடன் உயர்கல்வி நிறுவனத்தின் கல்வி அதிகார சபையினால் நிர்ணயிக்கப்பட்ட அறிகைநிலை இணைப்பு நிகழ்ச்சித்திட்டத்தில் குறைந்தபட்சம் 30 அலகுகளை பூர்த்தி செய்திருத்தல், குறிப்பிட்ட பாடத்துறைக்கான SLQF மட்டம் 3 இற்கான அனுமதிக்கு சமனான தகைமையாக கருத்தில் கொள்ளப்படும்.

**குறிப்பு:** முதலாவது நுழைவுத் தகைமைப் பிரிவின் அடிப்படையில் போதுமானளவு விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறாதவிடத்து, மட்டுமே ஏனைய இரு தகைமைப் பிரிவுகளிலிருந்தும் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

**மொழி மூலம்** : தமிழ்
**பாடநெறிக்காலம்** : 1 வருடம் (வார இறுதி நாட்கள்)
**கற்பித்தல் முறை** : நேரடி மற்றும் நிகழ்நிலை மூலம் நடைபெறும்.

**விண்ணப்பக் கட்டணம் ரூபா: 1,000/=**
**கற்கைநெறிக் கட்டணம் ரூபா: 70,000/=**
(இரண்டு தவணையில் செலுத்தலாம்)

**விண்ணப்பிக்கும் முறை:**

விண்ணப்பதாரிகள் http://www.cedec.esn.ac.lk/diploma என்ற வலைத்தளத்திலுள்ள நிகழ்நிலை விண்ணப்பப் படிவத்தினூடாக விண்ணப்பிக்க வேண்டும். மேலும், இதனுடன் தொடர்புடைய ஆவணங்களையும், நிதியாளருக்கு விலாசமிட்டு மக்கள் வங்கியின் எந்தவொரு கிளையிலும் ரூபா 1000/= பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் பல்கலைக்கழக பிரதியையும் Scan செய்து மேற்கூறிய வலைத்தளத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும். பணம் வைப்பிலிட வேண்டிய கணக்கிலக்கம் 227-1-001-9-0000-390, மக்கள் வங்கி, செங்கலடி கிளை.

அத்துடன் விண்ணப்பதாரிகள் அச்சடிக்கப்பட்ட விண்ணப்ப படிவத்தினையும், இதனுடன் தொடர்பான ஆவணங்களின் நிழல் பிரதி, பணம் வைப்பிலிட்ட பற்றுச் சீட்டின் பல்கலைக்கழக பிரதியினையும் இணைத்து

**உதவிப் பதிவாளர்,**
**வெளிவாரிப் பட்டங்கள் மற்றும் விரிவாக்கல் கற்கைகள் நிலையம்,**
**கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை,**
**இல.50, புதிய வீதி,**
**மட்டக்களப்பு.**

எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

மேலும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"கலைத்துறையில் டிப்ளோமா"** என்பதை குறிப்பிடுதல் வேண்டும்.

**விண்ணப்ப முடிவுத் திகதி: 10.01.2024**

மேலதிக தகவல்களுக்கு :
தொலைபேசி இல.: 065-2227025
மின்அஞ்சல் : cedecinfo@esn.ac.lk
இணையத்தளம் : http://www.cedec.esn.ac.lk

பதிவாளர்
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை,
வந்தாறுமூலை,
செங்கலடி,
**10.12.2023**